1972 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணுமலையில் கூட்டுறவுத் துறையில் வனஸ்பதி தொழிற்சாலை ஒன்றை நிறுவ ஒப்புக் கொண்டு, ஆலை நிறுவும் இடத்தையும் தேர்ந்தெடுத்து அதை வாங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனும் சில தனி நபர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. மேற்சொன்ன கழகமானது இந்த ஆலைக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : வட ஆற்காடு மாவட்டத்தில் இதற்கு முன்பே ஒரு வனஸ்பதி தொழிற்சாலை இருந்து அது இப்போது நடைபெறுமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மணிலா உற்பத்தி செய்வதால் இந்தத் திட்டம் ஒரு பெரிய அடிப்படையில் அமைய வேண்டும். ஆகவே, அத் திட்டத்தின் விவரங்களையும், அதன் மூலதன விவரங்களையும் அரசு அறிவிக்குமா .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவர அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதைத் தயாரித்தவுடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி : அதன் மூலதனச் செலவு எவ்வளவு என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் சொன்னேன். அவர்கள் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிருர்கள். ஸ்டேட் மார்க்கெட்டிங் பெடரேஷனை அவர்கள் தீர்மானித்த பிறகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அதைப் பற்றி கேள்வி கேட்கலாம்.

அணைக்கட்டுத் திட்டங்கள்

*** 285 வினு.—திரு. பி. எஸ். மணியம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள அணைக்கட்டுத் திட்டங்கள் தற்போது எத்தனை ?

[1972 மார்ச் 3

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஐந்து திட்டங்களுக்கு மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத் திட்டங்கள் எவ்வளவு ஆண்டுகளாக மத்திய அரசிடம் இருக்கின்றன? இது போன்ற முக்கியமான திட்டங்களுக்குக் கூட மத்திய அரசிடம் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற நிலையை எடுத்துக் கூறி உடனடியாக இத் திட்டங்களை அங்கிகரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்துதல், கொல்லிமலையின் அருகே அய்யாற்றில் நீர்த் தேக்கம் கட்டுதல். பெரியார் கால்வாய்களை அபிவிருத்தி செய்தல், தொட்டஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், காவேரியின் குறுக்கே வெள்ளத் தடுப்பு அணை யொன்றை கல்லணையில் கட்டுதல்.

இவைகள் மூன்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன, சில ஒரு ஆண்டு கால தாமதமாகின்றன. அடிக்கடி வற்புறுத்தி மத்திய அரசிடம் தெரிவித்து வருகிறோம்.

Coastal road at Santhome

* 286 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether a new road is being put up at Santhome, Madras along the seashore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும். கடற்கரையை ஒட்டி ரூ 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.